## பிப்ரவரி - 10

**"நீ வார்த்தையிலும், நடத்தையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும் விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு." - 1 தீமோ 4 : 12**

ஒவ்வொரு கிறிஸ்தவனும் பின்பற்றி நடப்பதற்குத் தகுதியான மாதிரியாக இருப்பதற்கு அதாவது, தன்னுடைய அன்றாட ஜீவியத்தில் கிறிஸ்துவைப் போல செய்ய ஆர்வமும் உண்மையுமுள்ள ஒரு மாதிரியுமாயிருப்பதற்குக் கஷ்டப்பட்டு முயற்சி செய்ய வேண்டும். பூரணத்தின் மாதிரியாக அதாவது, முடிவான நல் நடத்தைக்குரிய மகிமையும் பரிசுத்தத்தின் அழகும் உள்ளவர்களாக இந்த ஜீவியத்தில் இருக்க நாம் எதிர்பார்க்க முடியாது. இவ்விதமான மாதிரியை நமது கர்த்தராகிய யேசுவில் பெற்றிருக்கிறோம். வேறு எந்த அர்த்தத்திலும் பவுல் எப்போதாவது இவ்விதம் சொல்லவில்லை. "என்னைப் பின்பற்றுங்கள் அல்லது எங்களைப் பின்பற்றுங்கள்" என்று. ஆனால் அவர் சொன்னார்; "நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறது போல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவராயிருங்கள் என்று (1கொரி 11:1) பூரணத்துவத்தை அடைய ஆர்வமுள்ள முயற்சிக்கு அப்போஸ்தலன் ஒரு கிறிஸ்துவில் மட்டும் இருந்த முடிவான பூரணத்துவத்தை அடைய அல்ல. கிறிஸ்துவைப் பின்பற்றக் கஷ்டப்பட்டு முயற்சி செய்வதிலும் அவருடைய சித்தத்தை நிறைவேற்றுவதிலும் அவருக்கிருந்த உற்சாகத்தையும் தீவிரமான ஆர்வத்தையும்தான் மாதிரியாகப் பின்பற்ற நாம் நாட வேண்டும். **– Z ’95, 251 (R 1884).**

சபையின் முக்கியமான பதவிகளில் போதகர்களாக வைக்கப்பட்டிருக்கிறவர்கள், கிறிஸ்துவைப் போலோத்தவர்களாயிருப்பதற்கு இரு மடங்கான தேவை உண்டு. முதலாவது, தங்களுடைய அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்த வழக்கமாகப் பழகுவது, இரண்டாவது தங்களுடைய முன்மாதிரியாய் மற்றவர்கள் கிறிஸ்துவைப் போலொத்த தன்மையை அபிவிருத்தி செய்வதற்கு உதவி செய்வது. அன்பிலும், நம்பிக்கையிலும் தங்களைப் பற்றிக் கொண்டிருப்பவர்கள் மேல் அவர்களுக்கு இருக்கும் செல்வாக்கு அதிகமாயிருக்கிறது. ஆகவே, கிறிஸ்துவைப் போலொத்த குணத்தோடு அவர்களுடைய செல்வாக்கைப் பிரயோகிப்பதுதான்; அவர்கள் யாருக்கு போதிக்கிறார்களோ, அவர்களுக்கு உதவியாக இருக்கும் என்பது நிச்சயம். **- P ’27, 15.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

தீத் 2:7; 1பேது 2:21; 5:3; லேவி 18:2,3; 2நாளா 30:7; நீதி 22:24,25; மத் 23:1-3; யோவா 13:15; 1கொரி 8:9-13; பிலி 2:5; 1தெச 1:6-8; எபி 13:7; யாக் 5:10,11; 1பேது 3:5,6; 1யோவா 2:6;

**கோபுர வாசிப்பு : Z ’14, 200 (R 5493).**

**வினாக்கள் :** இந்த வாரத்தில் நான் சகோதரர்களுக்கு மாதிரியாயிருந்தேனா? எப்படி? பலன் என்ன?